தமிழர் பேரவை

முத்தமிழ் விழா 97



18 ஜனவரி 1997

எஸ்.எல்.எஃப். அரங்கம்

நேரம்: இரவு 7.00 மணி

முத்தமிழ் விழா சிறக்க வாழ்த்துகிறோம்!

ANDHRA curry

(Classic Indian Restaurnt)

INDIAN HERITAGE PTE LTD.

41 Kerbau Road, Opp.teka Market Taxi Stand
Singapore 219170.

Tel: 2933935

Outdoor Catering available for All Occassions

வாழ்த்துச் செய்தி



தமிழர் பேரவை, தமிழ் மொழியையும் கலாசாரத்தையும் வளர்ப்பதற்காக மட்டுமல்லாமல், கல்வித் திட்டங்களுக்கு நிதி சேர்ப்பதற்காகவும் முத்தமிழ் விழா நடத்த இருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். குறைந்த வருவாயுடைய குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்கள் கல்வியில் முன்னேற உதவும் நோக்கத்துடன் கடந்த பதினான்கு ஆண்டுகளாகத் தமிழர் பேரவை கல்வி உதவித் திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்தி வருவதாகவும் அறியும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது.

நல்ல கல்வித் தகுதியைப் பெற்றிருப்பது எத்துணை இன்றியமையாதது என்பதைத் தமிழ்பேசும் சமூகத்தினர் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். உயர் ஏட்டுக் கல்விக்கு மட்டுமல்லாமல், உயர் தொழில் நுட்பக் கல்விக்கும் நல்ல வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்துகொள்ளுமாறு செய்தல் வேண்டும். நவீன, உயர் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட தொழிற்சாலைகள் சிங்கப்பூரில் விரைவாகப் பெருகி வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

சமூகத் தலைவர்களும் அமைப்புக்களும் மேற்கொள்ளும் இத்தகைய முயற்சிகளுக்குச் சமூகத்தினர் அனைவருடைய ஆதரவும் நல்லுள்ளம் கொண்டோர், நன்கொடையாளர்கள் ஆகியோருடைய ஆதரவும் தேவை.

தமிழர் பேரவை தொடர்ந்து மேற்கொள்ளும் பணிகளுக்கு உங்களுடைய முழு ஆதரவையும் அளிப்பீர்கள் என்று நம்புவதோடு, இந்த முத்தமிழ் விழா முழு வெற்றி பெற வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

சித்திக் சனி.ஃப்
மூத்த கல்வித்துணை அமைச்சர்
கல்வி அமைச்சு
சிங்கப்பூர்.

MESSAGE



I am pleased to know that the Tamil Representative Council is staging the `Muthamizh Vizha` not only to promote Tamil Language and Culture but also to raise funds for educational projects.

I also note that TRC has consistently run educational assistance programmes over the last fourteen years to assist needy children in their educational performance.

Every member of the Tamil-speaking community should understand the importance and significance of having good educational qualifications. Parents should be made to realise that there are prospects not only for high academic qualifiactions but higher technical education too. Singapore is rapidly developing and plugging into sophisticated high-tech industries.

Such efforts by community organisations and leaders need the support of all members of the community, well-wishers and donors.

I hope that all of you would extend your support to TRC in its continuing endeavours and wish that Muthamizh Vizha is a great success.

Sidek Saniff
Senior Minister of State for education
Ministry of Education
Singapore.

வாழ்த்துச் செய்தி



உலகில் தமிழர்கள் எந்த மூலையிலே இருந்தாலும் - அவர்களைச் சந்திக்கும்போதும், அவர்களைப் பற்றி நினைக்கும்போதும் என் உள்ளம் உவகைக் கடலிலே பொங்கும்.


தாயகத் தமிழர்களோடு போட்டி போட்டுக் கொண்டு, பிற நாடுகளிலே வாழும் தமிழர்கள் நான் ஆட்சிப்பொறுப்பிலே இருந்தாலும், இல்லாவிட்டாலும் உள்ளன்போடு என்னிடம் அன்பு காட்டி வருபவர்கள், குறிப்பாக, சிங்கப்பூர் தமிழர்களின் அன்பைப் பற்றி வார்த்தைகளால் விளக்கிட இயலாது. 1954-ஆம் ஆண்டில் தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்களால் நிறுவப்பட்டு - தமிழர் பிரதிநிதித்துவ சபை என்ற பெயரிலே இயங்கி வந்த அமைப்பு - பின்னர் 1979 ஆம் ஆண்டு முதல் தமிழர் பேரவை என்ற பெயரிலே சிறந்த முறையிலே பணியாற்றி வருவதைப் பற்றிச் சிங்கப்பூரிலிருந்து வரும் தமிழர்கள் எல்லாம் என்னிடம் கூறுவதுண்டு.

சிங்கப்பூர் தமிழர் பேரவை வரும் ஜனவரித் திங்கள் 18ஆம் நாள் முத்தமிழ் விழா ஒன்றினை நடத்திவிருப்பது அறிந்தும், அதனையொட்டிச் சிறப்பு மலர் ஒன்றினை வெளியிடவிருப்பதறிந்தும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

முத்தமிழ் விழா சிறப்பாக நடைபெறவும், மலர் நல்லபல கருத்துக்களைத் தாங்கி வெளிவரவும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, சிங்கப்பூர் வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கம் இந்த விழா மூலமாகவும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- டாக்டர் கலைஞர் மு கருணாநிதி
தமிழக முதல்வர்

வாழ்த்துச் செய்தி



தமிழர் பேரவை தொடக்கக் காலத்திலிருந்தே தமிழ்மொழி, பண்பாடு, கலை, கல்வி ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றி வருகிறது.

இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள், கல்வியிலே நல்ல முன்னேற்றம் கண்டு, வாழ்க்கையில் வெற்றியடையப் பாடுபட வேண்டும் என்பதே இன்று நம் முன் நிற்கும் முக்கிய பிரச்னை. எனவே, அந்தப் பணியிலே நாம் நம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளோம்.

கடந்த பதினான்கு ஆண்டுகளாக, தமிழர் பேரவையின் கல்வித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் ஒவ்வோர் ஆண்டும் இதற்கு ஆகும் செலவை எப்படிச் சரிக்கட்டுவது என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது. அதற்காக இந்தத் திட்டத்தை நாம் கைவிட்டுவிட முடியாது. எத்தனை தடைகள் வந்தாலும் இந்தக் கல்விப் பணியைத் தொடர வேண்டும் என்று விழைகிறோம். எனவே நிதிப்பற்றாக்குறையைச் சமாளிக்க நாம் பல்வேறு வழிகளையும் நாட வேண்டியுள்ளது. அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு நம் கல்வி நிதிக்கு ஷா அறநிறுவனம். (ஷா பவுண்டேசன்) பதினைந்தாயிரம் வெள்ளி நன்கொடை வழங்கியுள்ளது. அவர்களுக்கு நம் உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றை வளர்க்கும் நம் பணியின் ஒரு கூறாக நடைபெறும் இந்த முத்தமிழ் விழா நமக்கு மகிழ்ச்சி தருகிறது. இதில் மிச்சப்படும் தொகை கல்வி நிதியில் சேர்க்கப்படுவது என்பது உண்மையிலேயே இரட்டிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது.

கோ.கந்தசாமி
தலைவர்
தமிழர் பேரவை

முத்தமிழ்க் கோட்பாடு

டாக்டர் சுப.திண்ணப்பன்

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம்

தமிழர்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழை வெறும் தகவல் பரிமாற்றக் கருவியாக மட்டும் கருதவில்லை. உயிராகவும் உணர்வாகவும் உயர்வுக்கு நீராகவும், உரிமைச் செம்பயிருக்கு வேராகவும் இளமைக்குப் பாலாகவும் அறிவுக்குத் தோளாகவும், பிறவிக்குத் தாயாகவும் பெருமைக்குக் கன்னியாகவும் தூதுக்குத் தோழியாகவும் வழிபாட்டுக்கு இறையாகவும் கருதினர். எனவே தான் அவர்கள் தங்கள் வாழ்க்கைக் குறிக்கோளை அறம், பொருள், இன்பம் என மூன்றாக வகுத்துக் கொண்டதைப் போல - தாங்கள் வாழ்ந்த நாட்டைச் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என மூன்றாகப் பார்த்ததைப் போல் தாங்கள் கண்ட தத்துவத்தை இறை, உயிர், தளை என மூன்றாகப் பகுத்துக் கொண்டதைப் போல் - தாங்கள் உண்ணும் கனியை மா, பலா, வாழை என மூன்றாக வகைப் படுத்தியதைப் போல் - தங்கள் வாழ்வின் ஊற்றாகத் திகழும் தமிழையும் **இயல், இசை, நாடகம்** என மூன்றாகப் பகுத்துக் கண்டனர். இயல், இசை, நாடகம் என்னும் இந்த முத்தமிழ்ப் பாகுபாடு தமிழர்களுக்கே உரிய தனிமரபாகும். மேலும் இம் மூவகைத் தமிழிலும் தமிழர்கள் உலகுக்கு வழங்கிய நன்கொடைகளும் தனித்தன்மை வாய்ந்தவையாகும்.

இயற்றமிழ் என்பது **இலக்கண இலக்கியங்களைக்** குறிக்கும். இலக்கியம், இலக்கணம் என்னும் இரண்டு சொற்களும் இலக்கு என்னும் அடிச் சொல்லிலிருந்து உருவானவை. இலக்கு என்பது குறிக்கோள். இலட்சியம் எனப்பொருள்படும். வாழ்க்கையின் குறிக்கோளை விளக்குவதற்கு இலக்கியமும் மொழியின் குறிக்கோளை நிறைவேற்ற இலக்கணமும் உதவுகின்றன. தமிழ்மொழியின் இலக்கணமும் இலக்கியமும் தொன்மைச் சிறப்புடையவை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு உடையவை. இலக்கண நூல்களில் பழமையானது தொல்காப்பியம். இதுதான் இன்று கிடைக்கும் தமிழ் நூல்களில் காலத்தால் முற்பட்டது. இதன் காலம் கி.மு. 3ம் நூற்றாண்டு எனக் கருகின்றனர். இந்நூலுக்கு முன் எத்தனையோ

இலக்கண இலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்க முடிகின்றது. உலகிலுள்ள மொழிகளின் இலக்கணங்கள் மொழிக்குரிய எழுத்து, சொல், தொடர் அமைப்புகளை மட்டுமே விளக்குகின்றன.

ஆனால் தமிழ் முதல் நூலாகிய தொல்காப்பியமோ தமிழ் மொழியின் எழுத்து, சொல் அமைப்பை விளக்குவதுடன் இலக்கியத்தின் பாடுபொருள், வடிவம், மரபு, சுவை, அணி ஆகியவற்றையும் விளக்குகிறது. இதனை ஒரு சிறப்பாக மொழியியல் அறிஞர்கள் கூறிப் பாராட்டுகின்றனர். இலக்கண உலகிற்குத் தமிழர்கள் வழங்கிய நன்கொடை தொல்காப்பியம் ஆகும். இக்கால மொழியியல் சிந்தனைகள் பல இந்நூலில் உள்ளன. தொல்காப்பியத்தைத் தொடர்ந்து இடைக்காலத்தில் நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் எனப் பல இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. பிற்காலத்தில் தமிழறிஞர்களுடன் மேனாட்டுக் கிறித்துவர்களும் பல தமிழிலக்கணங்களைச் செய்துள்ளனர்.

மொழியின் அமைப்பை இலக்கணம் விளக்குவது போல் மொழியின் அழகை **இலக்கியம்** விளக்கும். தமிழைப் போலவே தமிழ் இலக்கியத்தையும் கவிதை இலக்கியம், உரைநடை இலக்கியம், பேச்சு இலக்கியம் என மூவகைப் படுத்தலாம். வலாற்று நோக்கில் பழங்கால இலக்கியம், இடைக்கால இலக்கியம், இக்கால இலக்கியம் என மூவகையாகப் பிரிக்கலாம். தொல்காப்பியர் கால முதல் இன்று வரை இடையறாது தொடர்ந்து வரும் இலக்கிய வளமுடைய மொழி தமிழ். சங்க இலக்கியமான எட்டுத் தொகை பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், சிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் ஆகியன தமிழ் இலக்கியத்தின் சிறப்பினைப் பேசும். செய்யுள் இலக்கியமே தமிழில் மிகுதி. ஐரோப்பியர் வருகைக்குப் பிறகுதான் உரைநடை இலக்கியத்தின் வளர்ச்சியையும் செல்வாக்கினையும் காணுகிறோம். சிறுகதை, புதினம், நாடகம், புதுக்கவிதை முதலியன இன்று உரைநடை இலக்கிய வகைகளாக உள்ளன. உயர்ந்த சிந்தனைகளின் ஊற்றிடமான திருக்குறள் தமிழர்கள் இலக்கிய உலகிற்கு வழங்கிய நன்கொடைகளில் ஏற்றமிக்கது. சங்க இலக்கியம், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம், பக்திப்பாடல்களான திருமுறைப்பாடல்கள், ஆழ்வார்பாடல்கள் ஆகியனவும் தமிழர்களின் நன்கொடைகளாகக் குறிப்பிடலாம். சங்க இலக்கியத்தில் காணப்படும் அகம்புறக் கோட்பாடும் நீதிநூல்கள் விளக்கும் அறநெறிக் கோட்பாடும், பக்தி நூல்கள் பேசும் இறைநெறிக் கோட்பாடும் தமிழ் இலக்கியத்தின் தனித் தன்மைகளாகும்.

இசைத்தமிழ் என்பது பாட்டினைக் குறிக்கும். சுதி, பாட்டு, பண், தாளம், பக்க இயம், பாடுவோர் உள்ளம், கேட்போர் உள்ளம் ஆகிய அனைத்தும் ஒன்றி இசைந்தால் தான் இசை உருவாகும். இல்லாவிட்டால் அது "இரைச்சல்" ஆகத்தான் இருக்கும். இசை என்பது வாயினால் பாடுவது மட்டுமன்று, கருவியினால் இசைப்பதும் இசையே ஆகும். வாயினாற் பாடுவதை **மிற்றிசை** என்றும் கருவியினால் இசைப்பதைக் **கருவி இசை** என்றும் அழைத்தனர். தமிழர்கள் வாழ்வில் பிறப்பு முதல் இறப்புவரை இசைப்பாடல்கள் இடம் பெற்றிருக்கக் காணலாம். பிறந்த குழந்தை உறங்கத் தாலாட்டு இசைபாடினர். தமிழ்த்தாய்மார்கள். தொழிலாளர்களும் தங்கள் தொழிற் களைப்பைப் போக்க பல இசைப்பாடல்களை எழுப்பினர். வாழ்த்தவும் வணங்கவும் இசைப்பாடல்களே உதவின. இறந்த வீட்டிலும் ஒப்பாரி இசை பாடுகின்றனர்.

இப்படித் தமிழர்கள் வாழ்வு இசைமயமாகவே இருக்கிறது. மேலும் இறைவனையே இசைமயமாகக் கண்டு வழிபட்டவர்கள் தமிழர்கள். ஏழிசையாய் இசைப்பதிலே இறைவனைக் கண்டு ஆழ்வார்களும் நாயன்மார்களும் இடைக்காலத்தில் இசைப்பாடல்கள் ஆயிரக்கணக்கில் இயற்றியுள்ளனர். பிற்காலத்தில் அருணகிரியார், தாயுமானார், இராமலிங்கர், அருணாசலக் கவிராயர், முத்துத் தாண்டவர், அண்ணாமலை ரெட்டியார் ஆகியோர் பல தமிழிசைப் பாடல்களைப் பாடியுள்ளனர். கர்நாடக இசை என்பது தமிழிசையே. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இசை இயக்கம் தோன்றி எழுச்சி கண்டது. இசை பற்றிய குறிப்புகள் பழந்தமிழ் நூல்களில் பல உண்டு.

சரி கமபதநி என்னும் ஏழு வகை இசைக் கூறுகளையும் தமிழர்கள் மிகப் பழங்காலத்திலேயே குரல், துந்தம், கைக்கிளை, உழை, கிளரி, தாரம் எனப் பெயரிட்டு ஏழுவகைப் பண்களாக அழைத்தனர்.

தமிழர்கள் இசைக்கருவிகளைத் தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி, கஞ்சக் கருவி என நான்கு வகைப்படுத்தினர். மத்தளம், மிருதங்கம், முரசம் உடுக்கை முதலிய தோற் கருவிகளும், குழல், நாதஸ்வரம் முதலிய துணைக் கருவிகளும், யாழ், வீணை முதலிய நரம்புக்கருவிகளும் தாளம் முதலிய கஞ்சக் கருவிகளும் (வெண்கலக் கருவிகளும்) தமிழர்கள் உலகிற்கு வழங்கிய இசைக்கருவிகளாகும்.

நாடகத்தமிழ் என்று நடிப்பின் (உடல் அசைவின்) விளைவாகும், **நாட்டியம்** (நடனம்), **நாடகம்** (கூத்து), ஆகியவற்றைக் குறிக்கும் நாடகம் என்பதை நாடு அகம் எனப்பிரித்து நாட்டை அகத்தில் கொண்டு விளக்குவது என்றும்

உள்ளத்தை நாடுவது, தேடுவது என்றும் விளக்குவர். உள்ளத்தே உணர்ச்சியைத் தூண்டிச் செயற்பட வைப்பது நாடகம் ஆகும். நடனக் கலையில் பரதநாட்டியம் தமிழர்கள் கலை உலகிற்கு வழங்கிய காணிக்கையாகும். நாட்டியக்கலை பற்றிய பல குறிப்புகளைச் சிலப்பதிகாரம் பேசுகிறது. பரத நாட்டியம் தென்னிந்தியக் கலைகளின் திலகமாகத் திகழ்வது. பாவம், ராகம், தாளம் மூன்றின் இணைப்புத் தான் பரதம். ஆடல், பாடல், அழகு ஆகிய மூன்றும் கூடினால்தான் பரதம் சிறக்கும். நடனக் கலைக்குரிய தலைவனாக நடராசப் பெருமானைக் கண்டு சிற்பத்தில் வடித்துக்காட்டிச் சிறப்பெய்தியவர்கள் தமிழர்கள். நாடகம் என்பது கதை தழுவிய கூத்தாகும் அரசர்க்கு ஆடுகின்ற கூத்து என்றும் பொது மக்களுக்கு ஆடுகின்ற கூத்து என்றும் வகைப்படுத்தி நாடகக் கலையைத் தமிழர்கள் வளர்த்தனர். முதல் காப்பியமாகிய சிலப்பதிகாரம் நாடகக் காப்பியமாகக் கருதப்பட்டது.

இடைக் காலத்தில் இராஜராஜ சோழனும் அண்மைக் காலத்தில் பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாச சுவாமிகள், டி.கே. சண்முகம் ஆகியோரும் நாடகத் தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள் ஆவர். தோற்பாவைக் கூத்து என்னும் ஒரு வகைக் கூத்தும் தமிழர்கள் உலகிற்கு வழங்கிய நன்கொடையாகும். தென் கிழக்காசிய நாடுகளில் வயாங் குலித் என்னும் பெயரால் இன்னும் இது வழங்கி வருகிறது.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ப் பாகுபாடு தமிழ்ப் பண்பாட்டின் தலையாய கூறுகளில் ஒன்றாகும். இயல் என்பது மனத்தின் விளைவு ஆகிய எண்ணம். இசை என்பது எண்ணம் (மனம்), சொல், (வாய்) ஆகிய இரண்டும் இணைந்தது. மனத்தாலும் வாயாலும் உருவாவது. நாடகம் என்பது மனம், வாய், மெய் ஆகிய மூன்றின் விளைவாகிய எண்ணம், மொழி, செயல் ஆகிய மூன்றினால் அமைவது. முத்தமிழில் இயற்றமிழ் என்பது பலாப் பழத்தைச் சுவைப்பது போன்றது. பலாப்பழத்தின் கடினமான தோலை நீக்கி சக்கையை அகற்றிக் கொட்டையை நீக்கிச் சுளையை எடுத்துச் சாப்பிட வேண்டும். இதுபோன்று இலக்கிய இலக்கணத்தின் பொருளறிந்து இயற்றமிழைச் சுவைக்க வேண்டும். **இசைத் தமிழ்** அவ்வளவு கடினமானதன்று. **மாம்பழத்தைச் சுவைப்பது** போன்றது. இராகத்தோடும் தாளத்தோடும் இணைந்துள்ள இசையைச் சுவைப்பது மாம்பழத்தின் தோலை நீக்கிக் கொட்டையை அகற்றிச் சாப்பிடுவது போன்றதாகும். **நாடகத் தமிழைச் சுவைப்பது வாழைப்பழத்தைச் சுவைப்பது** போன்றது. வாழைப்பழத்தின் தோலை நீக்கியவுடன் சாப்பிட்டுவிடுகிறோம். அதுபோல நாடகத்தைப் பார்த்ததும் சுவைக்கலாம். தமிழர்கள் கண்ட முக்கனிக்கும் முத்தமிழுக்கும் இடையே உள்ள தொடர்பை இப்படி விளக்குகிறார். கி.ஆ.பெ. விசுவநாதம். முத்தமிழும் சுவைக்க வேண்டுமோ? நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தைப் படியுங்கள். அதுவே முத்தமிழ்க் காப்பியம், முதல் தமிழ்க்காப்பியம். சுவைத்தால் மட்டும் போதுமா? முத்தமிழையும் வளர்க்க முயலுங்கள்! அதன் வழி நம் பண்பாட்டை - கலைச்சிறப்பை நானிலம் அறியச் செய்யுங்கள்!

அன்பு உணவகம்
ANBU RESTAURANT

முத்தமிழ் விழா

A Place where you can have
all kinds of
Indian dishes at a
reasonable prices.

சிறக்க வாழ்த்துகிறோம்

158 Serangoon Road,
Singapore 218047.
Tel: 2934938, 2944800

எஸ்.ஐ.சாமி
டிரேடிங் கம்பெனி (பி) லிட்.

S.I.SAMY TRADING CO.PTE LTD.

அன்றைய இன்றைய திரைப்பட
வீடியோ டேப்புகள் வாடகைக்கு
கிடைக்கும்.

அனைத்து வகை மளிகைப்
பொருட்களும் நியாயமான விலையில்
கிடைக்கும்

57/59 Kerbau Road,
Singapore 219181.
Tel: 2972021, 2970055 Fax: 2992622

"The most solid comfort one can fall back upon is the thought that the business of one's life is to help in some small way to reduce the sum of ignorance, degradation and misery on the face of this beautiful earth"

- George Effliot-

- This is the guiding principle behind my business.

Call me, **Thiru,** for your family's complete **Insurance, Educational, Financial** and **Retirement Planning** needs.



PRUDENTIAL

CPT (NS) THIRUNAVUKKARASU Bsc (Comp. Sc.,)
Specialist in Business, CPF Investments and Educational policies

Direct Line: 7398848 Pager: 92157317, Mobile No: 96522057

Prudential Assurance Company Singapore (Pte) Ltd
3 Killney Road, #09-01 Winsland House, Singapore 239519,
Tel: 7388733, Fax: 7398844, Res: 2519193.
Part of Prudential Corporation plc.

Taste of South India

தமிழ் விழா

சிறக்க வாழ்த்துகிறோம்

180, Albert Street,
 # 01-03, Albert Court, Singapore 189971.
Tel: 3345157, Fax; 3324137
Pager: 92017752.

(Branch Office)
No.48 #01-01 Tras Street, Singapore 078987.
Tel: 2255889.

Outdoor Catering available for All Occassions

முத்தமிழ் விழா

18.1.97

நிகழ்ச்சி நிரல்

நேரம்		
6.45	பார்வையாளர் இருக்கையில் அமர்தல்	
	தமிழ் வாழ்த்து - பாடலிசை	ராபிள்ஸ் பெண்கள் பள்ளி
	நடனம்	நிருத்தியாலயா கவின்கலைக் கழகம்
	தமிழ் மொழியும் பண்பாடும்	தராமலிங்கம்
8.00	சிறப்பு விருந்தினர் வருகை	
8.02	வரவேற்புரை	ஏற்பாட்டுக்குழுச் செயலாளர்
8.05	தலைமையுரை	தலைவர், தமிழர் பேரவை
8.15	சிறப்புரை	மூத்த கல்வித் துணை அமைச்சர்
8.35	பரிசளிப்பு	சிறப்பு விருந்தினர்
9.00	இடைவேளை	
9.15	நாட்டுப்புறப் பாடல்கள்	புஷ்பவனம் குப்புசாமி குழுவினர்
10.45	நிகழ்ச்சி நிறைவு	

MUTHAMIZH VIZHA '97

18 January 1997

Programmes

PM		
6.45	Guest to be Seated	
	Show Starts - Musical Salutation to Tamil	RGS Indian Orchestra
	Dance	Nitralaya Aesthetics Society
	Tamil language & Culture	Prof. T.Ramalingam
8.07	Arrival of Guest-of-Honour	
	Welcome Speech	Mr. Rajendran Secretary Organising Commitee
	President's Address	Mr. G.Kandasamy President, TRC
	Guest-of-Honour's Address	**Mr. Sidek Saniff** **Senior Minister of State for Education**
8.35	Prize Giving	
9.00	Interval	
	Traditional Folk Songs	Pushpavanam Kuppusamy's & Group
10.45	End of Show - Thanks!	

முத்தமிழ் விழா

மெர்குரி டிராவல் சர்வீஸ் பிரைவேட் லிமிட்டேட்

அனைத்து விமான நிறுவங்களின்
அதிகாரத்துவ ஏஜெண்ட்

MERCURY TRAVEL SERVICE PTE LTD

#02-40 , INTERNATIONAL PLAZA,
ANSON ROAD
SINGAPORE 0207
TEL: 2211495(3 LINES)
FAX: 2254993

ஸ்தாபகர்: K S ராஜு (K செல்வராஜு)

சிறக்க வாழ்த்துகிறோம்

முத்தமிழ் விழா

ஹாஜி அப்துல் மஜீது

HAJEE L. H. ABDUL MAJEED
INTERNATIONAL INDENTING HOUSE
ASIA INSURANCE BUILDING

No.2 Finlayson Green
#16-08
Singapore 049247
Tel: 2202477 (4 lines)
Fax: 2250006

சிறக்க வாழ்த்துகிறோம்

நன்றி!

ஷா அறநிதிக்கு எங்களின் மனமார்ந்த நன்றி.

தமிழர் பேரவையின் கல்வி உதவி திட்டத்திற்கு $15,000 நன்கொடை அளித்து பேருதவி செய்த ஷா அறநிதிக்கு தமிழர் பேரவையின் மேலாண்மைக்குழு தனது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

A BIG THANK YOU TO THE SHAW FOUNDATION

THE MANAGEMENT COUNCIL OF THE TAMILS REPRESENTATIVES COUNCIL WISHES TO EXPRESS ITS HEARTFELT AND SINCERE APPRECIATION AND GRATITUDE TO THE SHAW FOUNDATION FOR ITS GENEROUS GRANT OF $15,000 DONATION TO THE TRC EDUCATIONAL ASSISTANCE PROGRAMME.

முத்தமிழ் விழா சிறக்க எங்கள் உளமார்ந்த வாழ்த்துகள்

வீரனார் சைவ உணவகம்

1 கஃப் சாலை
சிராங்கூன்
போன்: 2994027

முத்தமிழ் விழா சீரோடும் சிறப்போடும் நடைபெற எங்களின் உளமார்ந்த வாழ்த்துகள்

சிங்கப்பூர் செய்தித்தாள் விற்பனையாளர் சங்கம்

35 நாரீஸ் சாலை
சிராங்கூன்.

இந்த விழா சிறக்க உதவிய கிழ்க் காணும் அனைவருக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றி

* சிறப்பு விருந்தினர், மாண்புமிகு முத்த கல்வித் துணை அமைச்சர்
* வாழ்த்துச் செய்தி வழங்கிய டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்
* காரைக்குடி ரெஸ்டாரண்ட்
* கோமள விலாஸ் ரெஸ்டாரண்ட்
* கமல விலாஸ் ரெஸ்டாரண்ட்
* ஹனிபா டெக்ஸ்டைல்ஸ்
* ஆனந்தபவன் உணவகம்
* விளம்பரதாரர்கள்
* இலக்கியப் போட்டி நடுவர்கள்
* உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்
* தமிழ்முரசு
* சிங்கப்பூர் வானொலி (ஒலிக்களஞ்சியம்)
* சிலோன் ஸ்போர்ட்ஸ் கிளப்
* சிங்கப்பூர் தமிழர் இயக்கம்
* இரா.ஃபிள்ஸ் பெண்கள் உயர்நிலைப்பள்ளி
* நிருத்தியாலயா கவின்கலைக் கழகம்
* புஷ்பவனம் திரு குப்புசாமி குழுவினர்
* பேராசிரியர் த.இராமலிங்கம்
* சிங்கை எக்ஸ்பிரஸ்
* தமிழர் பேரவை துணைப்பாட வகுப்பு ஒருங்கிணைப்பாளர்கள் குழு
* எஸ்.எல்.எ.ஃப் அரங்கம்
* ஏதேனும் ஒரு வகையில் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய ஏனையோருக்கும்

நீல்கிரீஸ்
சிங்கப்பூரின் சிறந்த "சூப்பர்" மார்க்கெட்

மளிகை * திடீர் உணவு வகை * சமையல் எண்ணெய் & நெய் *ஊறுகாய் * நொறுக்குத் தீனி * மதுபானம் * தித்திப்பு * காய்கறி வகை * பால் & தயிர் வகை * வீட்டுச் சாமான்கள் * ஏன் தங்க நகைகளும்

உங்கள் அனைத்து தேவைகளுக்கும்
Nilgiri's Supermarket Pte Ltd
88-92 சிராங்கூன் ரோடு
சிங்கபூர் 217993.
போன்: 3923921, 3923926.
பேஃக்ஸ்:2963174
உங்கள் தேவை எங்கள் சேவை!

Design: KT Graphics, 35 Tannery Road, #06-10 Tannery Block, Singapore. Tel: 7470507